Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 36/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | ஷர்மிளா | Calling: | HR |
| Father's Name: | ஆறுமுகம் | Religion: | |
| Village: | அம்பலூர் | Age: | 24 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 01.10 PM

( எதிரி ஆஜர். )

அ.சா.1 மனுவின்பேரில் அழைத்து எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை.

ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு முறை என்றால் தாய் மாமா உறவு முறை. மல்லிகா என்பவர் எனது அம்மாவின் அக்கா ஆவார். எங்களுக்கும் என் அம்மாவின் அக்காவிற்கும் இடையே நிலப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான், எதிரியும் எனது அம்மாவின் அக்காவும் பேச்சு வார்த்தையில் உள்ளார்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் கருத்து வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எத்தனை வருடமாக கருத்துவேறுபாடு உள்ளது என்றால் மூன்று வருடமாக உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஜனகன் மற்றும் பழனி ஆகியோருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் 20 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் 10 நபர்கள் இருந்தார்கள். ஜல்லிபோடும் போது அந்த 10 நபர்கள்இருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது, நான் காலையிலே வீட்டை விட்டு சென்றுவிட்டேன். நான் காயம்பட்டு மயக்கநிலையில் இருந்தேனா என்றால் ஆமாம், மருத்துவர் விசாரிக்கும்போது மயக்கநிலையில் இருந்தேனா என்றால் ஆமாம். மருத்துவர் விசாரிக்கும் போது நடந்த விவரங்களை மருத்துவரிடம்

யார் சொன்னது என்றால் என் அம்மா சொன்னார். என் அம்மாதான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான். மருத்துவரின் விபத்து பதிவேட்டில் எனது சகோதரன் ஹரிஷ் தான் சிகிச்சைக்கு அழைத்து சென்றதாக உள்ளது என்றால் சரியல்ல. நான் போன் செய்து எனக்கு அடிபட்டதை குறித்து எனது அப்பா, அம்மாவிடம் சொன்னபிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது பெண்மைக்கு இழுக்கு ஏற்படும் விதத்தில் எதிரி எந்த செயலும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் போன் செய்து என் அப்பா, அம்மாவிற்கு சொல்வதற்கு முன் சம்பவயிடத்தில் என்ன நடந்தது என்று அவர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக உள்ள அனைவரும் எங்கள் உறவினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் என்றால் பாலு, பிரகாசம் ஆகியோர் மட்டும் எனது பக்கத்து வீட்டுகாரர்கள். நான் ஏற்கனவே எனது முதன்மை விசாரணையில் சொல்லிய சாட்சியங்களை போலிசார் கேட்டுக்கொண்டதற்காக சொன்னேன் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே உள்ள நிலப்பிரச்சனை காரணமாக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வெளிபுறகாயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் நடந்து போகும் போதோ, இருசக்கரவாகனத்தில் செல்லும் போதோ நிலைத்தடுமாறி கீழே விழுந்தால் எனக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஷர்மிளா

SRIPATHI K
Digitally signed by SRIPATHI K